நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டுமண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திருமதி.கே.ஆர்.பாண்டீஸ்வரி, ஏ.எம்.ஐ.இ,

ந.க.எண்.1824/2011/செம3

நாள். 2 .07.2011

பொருள் பள்ளிக் கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம் , செங்கல்பட்டு – காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நென்மேலி கிராமம் - இத்துறையால் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு நஊஇ எண். 20/2009-ல் அமையும் கல்வி உபயோகப்பகுதி 10235.0 சமீ பரப்புள்ள இடத்தில் 6205.74 சமீ பரப்பில் G + 2 தளங்களில் பள்ளி கட்டிடம் கட்ட தொழில் நுட்ப இசைவு அளித்தல் -- குறித்து.

பார்வை 1. ஊராட்சி மன்றத் தலைவர், நென்மேலி ஊராட்சி அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.3.2.2011

2. அரசாணை எண்.161, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறை நாள். 9.9.09

3. இவ்வலுவலககடிதம் இதே எண் நாள்.17.02.2011

4. மனுதாரர் கடிதம் நாள்.10.6.2011 மற்றும் 18.7.2011

************

<u>உத்தரவு</u>

பார்வை 1 –ல் சுட்டிய கடிதம் மூலம் பெறப்பட்ட இப்பொருள் சம்மந்தமான இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நென்மேலி கிராமம், இத்துறையால் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு நஊஇ எண். 20/2009-ல் அமையும் கல்வி உபயோகப்பகுதியில் 10235.0 சமீ பரப்புள்ள இடத்தில் 6205.74 சமீ பரப்பில் அமையும் உத்தேச பள்ளிக் கட்டுமானத்திற்கு கவ/நஊதுஇ(செம) எண்.52(அ முதல் வரை)/2011 என எண்ணிடப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப இசைவு அளிக்கப்படுகிறது.

பார்வை 3–ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதத்தில் கோரப்பட்ட அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாட்டு முழுத் தொகையான ரூ.15,52,500/-- மற்றும் நன்னிலை வரி ரூ.6200/- ஆகியவை மனுதாரர் பார்வை 4–ல் சுட்டிய கடிதம் மூலம் முழுவதுமாக பெறப்பட்டுள்ளது.

<u>நிபந்தனைகள்.</u>

1. உத்தேச பள்ளிக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர்தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள். 3.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின் உத்தேச கட்டிடத்திற்கு **Fly Ash Bricks** மற்றும் **Materials** பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

நென்மேலி ஊராட்சி மன்றத் தலைவர், இறுதி உத்திரவினை விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்புமாறு நென்மேலி ஊராட்சி மன்றத் தலைவர் கேட்டுக் கொள்ப்படுகிறார்.

20/7/11

நகர் ஊரமைப்புதுணைஇயக்குநர்(பொ)
செங்கல்பட்டு

இணைப்பு
2 தொகுப்புவரைபடங்கள்

பெறுநர்
ஊராட்சி மன்றத் தலைவர்,
நென்மேலி ஊராட்சி,
திருக்கழுக்குன்றம் வட்டம்.
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல்
திரு.பி.அனுபமா மற்றும் ஜி.திருமலை
எண்.91-92, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம்
சென்னை-